**22.11.2022**

**OS.No. 363/2018 PW : 1, திரு. நவீன் கிஷோர்**

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை...**

நான் தற்போது பெங்களூரில் குடியிருக்கிறேன். நான் தற்போது Goldman Sach என்ற அமெரிக்கன் ஐ.டி கம்பெனியில் வேலை பார்த்துவருகிறேன். நான் பி.சி.ஏ. படித்திருக்கிறேன். இன்று என்னுடன் என் தாயார் நீதிமன்றத்திற்கு வரவில்லை. வழக்கை தாக்கல் செய்யவும், என் முதல்விசாரணை வாக்குமூலத்தை தயார் செய்யவும் நானும், என் தாயாரும் சேர்ந்து தான் என் வழக்கறிஞருக்கு தகவல் சொன்னோம். ஆகவே அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். தாவா சொத்துக்கள் ஊத்துக்கோட்டை தாலுக்கா, அன்னதான காக்கவாக்கம் என்ற கிராமத்தில் இருக்கிறது. தாவா சொத்துக்களை நான் பார்த்ததில்லை. ஆனால் அந்த கிராமத்திற்கு சென்றிருக்கிறேன். தாவா சொத்துக்களின் சர்வே எண்கள் எனக்கு தெரியும். இணையதளத்திலிருந்து சொத்து விவரங்களை எடுத்தேன். 1ம் பிரதிவாதியின் தந்தை மற்றும் அவரது பாட்டனார் கூறிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது. என் அம்மா சொல்லி எனக்கு தெரியும். என் தாயாரின் பெற்றோர்கள் வீடு சித்தூர் மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணாபுரம் கிராமத்தில் இருக்கிறது. நான் அந்த கிராமத்தில் தான் பிறந்தேன். எனக்கு தெரிந்து என் தாயாரும் தந்தையும் பிரிந்து தான் இருக்கிறார்கள். நான் பிறந்தது முதல் அன்னதான காக்கவாக்கம் என்ற கிராமத்தில் குடியிருந்ததில்லை. 27.06.1988ல் நான் பிறந்தேன். என் தாயாருக்கும், 1ம் பிரதிவாதிக்கும் திருமணம் நடைபெற்ற கொஞ்ச நாட்களிலேயே வரதட்சனை கொடுமை காரணமாக என் தாயாரும் 1ம்

பிரதிவாதியும் தனித்தனியாக பிரிந்து வாழ்ந்தார்கள். வரதட்சனை கொடுமை சம்பந்தமாக சத்தியவேடு நீதிமன்றத்தில் சி.சி. 8/1992 என்ற வழக்கு தாக்கல் செய்தார். அதில் 1ம் பிரதிவாதி விடுதலையாகிவிட்டார் என்று சொன்னால் அந்த வழக்கு முடிவடைந்துவிட்டது. எப்படி முடிந்தது என்று எனக்கு தெரியாது. அவ்வழக்கு நிலுவையில் இருந்தபோது 1ம் பிரதிவாதி விவாகரத்து கேட்டு என் தாயார் மீது திருவள்ளூர் சார்பு நீதிமன்றத்தில் எச்.எம்.ஓ.பி. 76/1991 என்ற மனுவை தாக்கல் செய்து 03.09.1992ல் விவாகரத்து பெற்றார். தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் பூர்வீக சொத்துக்கள் என்று எப்படி கூறுகிறேன் என்று கேட்டால் நான் தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை ஆவணத்தின் மூலம் கூறுகிறேன். 1ம் பிரதிவாதியும், அவரது தாயாரும், அவரது தந்தையின் உடன்பிறந்தவர்களும் பாகம் செய்துகொண்டார்கள். பூர்வீக சொத்துக்கள் என்று காட்ட அந்த ஆவணத்தை தவிர வேறு ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. 'பி' மற்றும் 'சி' அட்டவனை சொத்துக்கள் அந்த பாக ஆவணத்தில் கண்டுள்ளதா என்று கேட்டால் பாக ஆவணத்தில் சில சொத்துக்கள் தான் இருக்கிறது. தாவா சொத்துக்கள் அனைத்தும் இல்லை. 'பி' மற்றும் 'சி' அட்டவனை சொத்துக்களில் எந்தெந்த சொத்துக்கள் பாகத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு கிடைத்தது என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது. சர்வே எண்கள் ஞாபகமில்லை. பாக ஆவணத்தில் உள்ள 'பி' அட்டவனை சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது. அது பிராதின் 'ஏ' அட்டவனை சொத்தாக காட்டப்பட்டுள்ளது.

பாக ஆவணத்தில் 'ஏ' அட்டவனை சொத்தாக காட்டப்பட்ட சொத்து பிராதின் 'பி' அட்டவனை சொத்தாக காட்டப்பட்டுள்ளது. அந்த சொத்து 1ம் பிரதிவாதிக்கும் அவரது தாயார் கமலம்மாளுக்கும் கூட்டாக ஒதுக்கப்பட்டது. அந்த சொத்தை 1ம் பிரதிவாதியும், கமலம்மாளும் அதே வருடத்தில் தனித்தனியாக பிரித்துக் கொண்டார்கள். கமலம்மாள் உயில் மூலம் 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த சொத்துக்களையும், இதர சொத்துக்களையும் பிராதின் 'சி' அட்டவனை சொத்தாக காட்டியிருக்கிறேன். 1ம் பிரதிவாதியும், அவரது தந்தையின் சகோதரர்களும் சொத்துக்களை ஏற்கனவே பாக ஆவணம் மூலம் பிரித்துக் கொண்டுவிட்டதால் அது பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றும் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. ஆகவே தாவா சொத்துக்கள் முழுவதும் பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றும் பாக ஆவணத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு கிடைக்கப் பெற்றது என்றால் சரியல்ல. தனிப்பட்ட சொத்து என்ற முறையில் தான் 1ம் பிரதிவாதியும், அவரது தாயாரும் கிரைய ஆவணம், உயில் உள்ளிட்ட ஆவணங்களை எழுதி வைத்திருக்கிறார் என்றால் சரியல்ல. ஆகவே அந்த ஆவணங்கள் செல்லாது என்று நான் பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னர் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பவில்லை. நான் 6, 7ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த போதே 1ம் பிரதிவாதியிடம் பாகம் கேட்டு வருகிறோம். அவரும் கொடுப்பதாக சொன்னார். நானும், என் தாயாரும், தாயாரின் அப்பாவும் சென்றோம்.

எங்களுடன் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்களும் பாகம் கேட்க வந்தார்கள். அவர்கள் பெயர் எனக்கு ஞாபகமில்லை. தற்போது என் வயது 34 ஆகும். என்னுடைய 11, 12 வயதிலிருந்தே பாகம் கேட்டுவந்திருந்தால் ஏன் இதுவரை வழக்கை தாக்கல் செய்யவில்லை என்று கேட்டால் 1ம் பிரதிவாதி பாகம் கொடுக்க மாட்டேன் என்று சொல்லாததாலும் பங்கு தருகிறேன் என்று சொன்னதாலும் உடனே வழக்கை தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தில் எனக்கு பங்கு எதுவும் இல்லை என்றும் 1ம் பிரதிவாதியிடம் நான் எப்போதும் பாகம் கேட்டதில்லை என்றும் அவரும் கொடுப்பதாக ஒப்புக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. 23.01.2016 அன்று தான் சொத்தில் பாகம் கேட்டு முதல் முறையாக 1ம் பிரதிவாதியை மிரட்டினோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெரியபாளையம் காவல் நிலையத்தில் எங்கள் மீது புகார் கொடுத்து எங்களை விசாரித்தார்கள். அதன்பிறகு நாங்கள் கொஞ்ச நாள் அமைதியாக இருந்துவிட்டு மீண்டும் பிரச்சனை செய்தோம் என்றும் ஆகவே 1ம் பிரதிவாதி 27.06.2018 அன்று டி.ஜி.பி.யிடம் ஒரு புகார் கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புகார் கொடுத்தது எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த பாகமும் கிடைக்காது என்றும் 1ம் பிரதிவாதியை மிரட்டினால் பாகம் கொடுத்துவிடுவார் என்றும் அவரை மிரட்டி வருகிறேன் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.